*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume VIII (1)**
**December- 2023**

## கடித இலக்கியங்களில் படைப்பாளரின் வாழ்வியல்

நாகஜோதி,செ.
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author's mail id:** nagajyothi@vvvcollege.org

### ஆய்வுச்சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கியப் படைப்பாளர்களில் கு. ஆழகிரிசாமி சிறப்பிடம் பெற்றவராவர். இந்நூற்றாண்டு காலகட்டத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் தம் மன எண்ணங்களைக் கடிதம் வழி பரிமாறிக் கொண்டனர். கு.அழகிரிசாமி தம் நண்பராகிய கி.ராஜநாராயணனுக்கு எழுதிய கடிதம் வழி அவ்விருவரின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறது. இரா.காமராசு எழுதிய கடித இலக்கியம் என்ற நூலில் இடம் பெற்றுள்ள பத்து கடிதங்கள் மூலம் கு.அழகிரிசாமியின் வாழ்வியல் இன்றைய சமுதாயத்திற்குப் பயன் தரும் விதமாக அமைந்துள்ளமையை அறிய முற்படுகிறது.

**குறிப்புச்சொற்கள்**

**கரிசல் மண்ணின் மைந்தர்கள் - கு.அழகிரிசாமியின் நண்பர் கி.ராஜநாராயணன்- கு.அழகிரிசாமியின் கொள்கை. நட்பு, கு.அழகிரிசாமியின் இலக்கிய ஆர்வம், இசையார்வம்.**

### முன்னுரை

சமுதாயக் கட்டமைப்பின் அற்புதத்தை உணர்ந்த காலகட்டத்தில் கடிதம் மிகச் சிறந்த ஊடகமாகப் பரிணமித்திருந்தது. அத்தகைய காலகட்டத்தில் வாழ்ந்த இலக்கியவாதிகள் தம் நட்பை கடிதம் மூலம் பரிமாறிக் கொண்டார்கள். கரிசல் மண்ணில் வாழ்ந்த கு.அழகிரிசாமியும், கி.ராஜநாராயணரும் உரைநடை இலக்கியங்களில் முக்கியத்துவம் பெற்றவர்களாவர். கு.அழகிரிசாமி புத்தகங்கள் வாசிப்பதையும் எழுத்தாளராகக் கடமையாற்ற வேண்டுமென்பதையும் தம் இலட்சியமாக்கி வாழ்ந்தவர். பல்துறைவித்தகர், நல்ல புலமையாளர், சிறுகதை, புதினம், நாடகம், கவிதை, கீர்த்தனை, கட்டுரை எனப் பல நிலைகளில் தம் திறமையை வெளிப்படுத்தியவர். இலக்கியச் சிந்தனையாளர்களோடும், இசை ஞானிகளோடும் நட்புறவு கொண்டவர்.

கு.அழகிரிசாமி 1923 முதல் 1970 வரை வாழ்ந்தவர். அவரின் வாழ்வில் நட்பு, புத்தகவாசிப்பு, இலக்கியப்படைப்பு மற்றும் இசை, என அனைத்தும் பிரதானமாக இருந்தது. இத்தகைய நிலையை கி.ராஜ நாராயணனுக்கு கு.அழகிரிசாமி எழுதிய கடிதங்கள் வழி அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கடித இலக்கியம் - விளக்கம்**

இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்பர். கடிதம் முக்காலத்தின் கண்ணாடி; மனித உணர்வுகளின் பெட்டகம்; செய்தி பரிமாற்றத்தின் ஊடகம்; ஒரு கடிதத்தின் மூலம் கடிதம் எழுதுபவரின் வாழ்க்கையையும், பெறுபவரின் வாழ்க்கையையும் அறிய முடிகிறது. அக்கடிதத்தின் பொருண்மை அடிப்படையில் வரலாற்றுத் தரவுகளாகத் திகழ்கிறது. 'இரு மனிதர்களுக்கு இடையே கருத்தைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படும் ஒரு கருவியே கடிதமாகும்''[1] என்கிறார் க.த.திருநாவுக்கரசு. "கடிதங்கள், சுயசரிதைத் துணுக்குகள், யோசித்து எழுதப்படும் சுயசரிதை நூல்கள் போலின்றி இயற்கையாக மனத்தில் எண்ணம் தோன்றும் வேகத்தில் தோன்றுபவை கடிதங்கள். அந்த நிமிடத்திய சிந்தனை அப்படியே இயற்கையாகப் பதியப்படுகிறது. கடிதத்தை சத்தியத்தின் சாட்சி என்று சொல்லலாம். என்பார் ரா.அ.பத்மநாபன்''[2]. "எழுத்துக்கள் மூலம் எண்ணங்களை வெளிப்படுத்தி ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள உதவுவது மடல் என்று குறிப்பிடுகிறார் மா.செல்வராகவன்''[3]. இத்தகைய விளக்கங்கள் கடிதங்களின் சிறப்பை உணர்த்துகிறது.

**கு.அழகிரிசாமியின் வாழ்வில் நட்பு**

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு"4 (குறள் -786)**

என்ற குறளுக்குப் பொருத்தமாக கு.அழகிரிசாமியும், கி.ராஜநாராயணனும் நட்போடு வாழ்ந்தவர்களாவர். உண்மை நட்பு எதையும் மறைத்து செயல்படத் தூண்டாது. மறைபிறர் அறியாமை என்ற கூற்றுக்கேற்ப நட்பு இருக்க வேண்டும். நண்பரிடம் உண்மைத் தன்மை நிறைந்திருந்தால் மட்டுமே தூய நட்பாக இருக்க முடியும். ஒரே ஊரைச் சார்ந்த கு.அழகிரிசாமி கி.ராஜநாராயணனோடு கொண்ட நட்பு தூய உன்னதமான நட்பாக இருந்தது. கு.அழகிரிசாமி சென்னை, மதுரை, மலேசியா, சிங்கப்பூர், எனப்பல இடங்களில் வாழ்ந்தவர் கி.ரா உடல் நலம் சரியில்லாமல் டோனாவூரில் சிகிச்சை மேற்கொண்டிருந்த காலத்தில் கு.அழகிரிசாமி தம் சொந்த ஊரான இடைசெவலுக்குச் சென்றிருந்தார். நண்பர் இல்லாத இருப்பிடம் வெறுமையாகக் காணப்பட்டது. இவர் புத்தகம் படிக்கும் ஆர்வத்தையும் இழந்தார். இதனை, "இன்று வரையும் ஒரு பக்கத்தைக்கூட மன உற்சாகத்தோடு வாசிக்கவில்லை. வாசிப்பதில் எனக்கு இவ்வளவு வெறுப்புத் தட்டியது தாஜ்மஹால் கட்டிய அதிசயம் போல எல்லோரும் அதிசயக்கிறார்கள்''[5] என்று கி.ராவுக்குக் கு.அழகிசாமி எழுதியுள்ள கடிதத்தின் மூலம் இவர்களது நட்பின் ஆழத்தை உணர முடிகிறது. சிகிச்சைக்குச் சென்ற கி.ரா பதில் கடிதம் போடாமல் இருந்ததை நினைத்து வருந்திய கு.அழகிரிசாமி "உன்

உடல் நிலை எப்படி? எடையில் ஏதாவது கூடுதல் உண்டா? இருமல், சளி வகையறாக்கள் எப்படி இருக்கின்றன? மழை எப்படி? டாக்டர் என்ன சொன்னார்? மேற்கண்ட விபரங்களுக்கு உன் பதிலை தினசரி எதிர்பார்ப்பதும் ஏமாந்து போவதுமாக இருக்கிறேன். நீண்ட கடிதம் எழுத சிரம்மாக இருக்குமென்றால் ஒருகார்டு கூடவா முடியாது?"[6] என்று கேள்விக்கணை தொடுத்து எழுதியுள்ள கடிதத்தின் மூலம் நட்பின் உரிமையை அறிய முடிகிறது. கி.ரா ஜனசக்தி இதழுக்கு எழுதிய கட்டுரையில் உள்ள தவறுகளைச் சுட்டிக் காட்ட நினைத்த அழகிரிசாமி "கிராம அதிகாரிகளைப் பற்றி நீ குறிப்பிட்டிருக்கும் வாசகத்தில் 'நாக்கில் ஜலம் சொட்ட' என்பன போன்ற சொற்களை விட்டு விட்டு கொஞ்சம் மரியாதையான பாஷையை உபயோகித்திருக்கலாம். குற்றத்தை எடுத்துக்காட்டினாலும் மரியாதை கொடுக்க வேண்டாமா?[7] என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் நட்பின் உரிமையை உணர முடிகிறது. ஆனால் இன்றைய சூழலில் சமுதாயத்திற்கு நற்சிந்தனையைத் தரவல்ல படைப்பாளர்கள் சுயநல வாதிகளாக வாழ்கிறார்கள். கு.அழகிரிசாமி போன்ற படைப்பாளர்களின் இன்றைய சமுதாயத்திற்கு பயன்தரவல்லது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

## கு.அழகிரிசாமியின் வாழ்வில் இசை ஆர்வம்

இசை மனிதனைப் பண்படுத்தும்; வளமாக்கும். ஏனெனில் இசையைக் கேட்டாலும் இசைத்தாலும் மனம் மகிழும். இத்தகைய இசையார்வம் மிக்கவராக கு.அழகிரிசாமி வாழ்ந்திருக்கிறார் என்பதை கி.ராவுக்கு எழுதியுள்ள கடிதங்கள் உணர்த்துகின்றன. "நான் சமீபத்தில் அனுப்பிய சாகித்யம் எந்த ராகத்துக்கு பொருந்தியது? உசேனிவர்ணம் சரியாக இருக்கிறதா? நடன பைரவிசாகித்யம் எப்படி இருக்கிறது?"[8] என்று தம் பாடலுக்குப் பொருத்தமாக ராகம் அமைத்துத் தரும்படி கேட்பதாக எழுதப்பட்டுள்ள கடிதத்தின் மூலம் இசை ஆர்வம் மிக்கவர் என்பதை உணரமுடிகிறது.

## புத்தக வாசிப்பார்வம்

எழுத்தாளர்களின் வாழ்க்கை புத்தகம் வாசிப்பதில் ஆர்வம் நிறைத்திருக்கும் என்பர். கு.அழகிரிசாமி புத்தகங்கள் வாங்கி வாசிப்பதில் கொண்டிருந்த ஆர்வத்தை தம் நண்பரிடம் "ஏதோ சில புத்தகங்களைப் படித்திருக்கிறோம் சென்ற வருஷத்தில். வரும் வருஷத்தில் இத்தனை புஸ்தகங்கள் படித்து விடுவதென்று சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும். ஏராளமாக - கணக்கு வழக்கில்லாமல் படிக்கிறேன். ஊரிலிருந்து வந்து பல புஸ்தகங்களைப் படித்துவிட்டேன். நீ என்ன புஸ்தகம் படிக்கிறாய்?[9] என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் புத்தகம் வாசிப்பதில் ஆர்வம் மிக்கவர் என்பதை உணரமுடிகிறது. கு.அழகிரிசாமி மாட மாளிகையில் சொகுசு வாழ்க்கையை விரும்பாதவர். தனக்குக் கிடைக்கும் பணத்தில் புத்தகம் வாங்குவதையே பெரும்பாக்கியமாகக் கருதியிருக்கிறார். வாழ்வின் நேரத்தை புத்தகம் வாசிப்பிற்கான அற்புத நேரமாகக் கழித்திருக்கிறார்.

**கு.அழகிரிசாமியின் இலக்கியப் படைப்பார்வம்**

புத்தகம் வாசிப்பதில் ஆர்வம் கொண்டிருந்த கு.அழகிரிசாமி இலக்கியங்கள் படைப்பதிலும் ஆர்வம் மிக்கவராக இருந்தார். இதைத் தம் நண்பரிடம் கடிதம் மூலம் பரிமாறிக் கொண்டார் என்பதை, “புது வருஷத்தோடு என் நாவலும் ஆரம்பிக்கும்; அதாவது எழுதத் தொடங்கிவிடுவேன். நாவலுக்காக நான் இரவு பகல் தூக்கமில்லாமல் சிந்தித்து சிந்தித்து எத்தனையோ கருத்துக்களைக் குவித்து வைத்திருக்கிறேன். நான் சென்னைக்கு வந்து நான்கு நாவல்களுக்கும் ஒரு சிறு காவியத்துக்கும் பன்னிரெண்டு கதைகளுக்கும் விஷயங்கள் சேகரித்து விட்டேன். ஓவ்வொன்றாக எழுதி முடிக்க வேண்டியது தான். நானும் நாடகம் எழுத ஆரம்பிக்கிறேன். நாடகம் ஒரு தனிக்கலை. அதற்கென்று சில குணங்களுண்டு, சிரமத்துடன் நாடகக் கலையைக் கையாள வேண்டும்”[10] என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் எந்த ஒரு படைப்பையும் நேர்த்தியாக எழுத வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் என்பதையும், சமுதாயச் சீரழிவுக்குக் காரணமாகும் தன்மையில் எந்த ஒரு படைப்புக்களையும் வெளிப்படுத்தமாட்டார் என்பதையும் கடின உழைப்பாளர் என்பதையும் அறிய முடிகிறது. இப்படைப்பாளரின் வாழ்வியல் இன்றைய சந்ததியினருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆங்கிலப் புலமையாளர் கு.அழகிரிசாமி**

தமிழ்ப் புலமையும் ஆங்கிலப் புலமையும் பெற்ற கு.அழகிரிசாமி நூல்கள் வாசிப்பதோடு மட்டுமல்லாமல் மொழி பெயர்ப்பதிலும் வல்லவர். சென்னையில் வாழ்ந்த காலகட்டத்தில் ஆங்கில நூல்களை வாசிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார் என்பதை, கு.அழகிரிசாமி கி.ராவுக்கு எழுதிய கடிதத்தில், “டால்ஸ்டாயின் இருளின் வலிமையை யார்தான் மூலத்தில் படித்திருக்கிறார்கள்? நான் ஆங்கிலத்தில் படித்திருக்கிறேன்” என்றும் “சில தங்கமான கதைகளை மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறேன். அவற்றில் ஒன்று (லைலா - மஜ்னூன்) பிரசண்ட விகடனில் வெளிவரும்.”[11] என்று தெரிவித்து மொழிபெயர்க்க நினைத்த நூல்களைப் பற்றிப் பெருமையடைந்தார். என அறியமுடிகிறது. ஒரு படைப்பாளர் பன்மொழியறிவோடு இருக்கவேண்டும் என்பதை இக்காலப் படைப்பாளர்கள் கருத்தில் கொள்வதாக அழகிரிசாமியின் வாழ்வியல் அமைந்துள்ளது பெருமைக்குரியதாகும்.

**கம்பர் மீது பற்று கொண்ட கு.அழகிரிசாமி**

கு.அழகிரிசாமி கம்பரைத் தெய்வமாகக் கருதி வாழ்ந்தவர். கம்பரின் வாழ்க்கையை நாடகமாக்கியவர். கம்பராமாயணத்தைப் பதிப்பித்தவர். கம்பன் தினத்தன்று கம்பரைப் பெருமைப்படுத்திப் பாடல் பாட நினைத்தவர். சென்னையில் வாழ்ந்த போது கு.ராவுக்கு எழுதிய கடிதத்தில், 4 அல்லது 5 நாட்களில் ஒரு சாகித்யமும் கம்பன் பாடலும் அனுப்புவேன். உடனே ஸ்வரப்படுத்திய அனுப்ப வேண்டும். கம்பன் தினம் வருகிறதல்லவா?[12] என்று கூறியிருப்பதன் மூலம் கம்பர் மீது மிகுந்த பற்று

கொண்டவர் என்பதை அறியமுடிகிறது. ஒரு படைப்பாளர் இலக்கியச் சுவை மிகுந்தவராக இருத்தல் சிறப்பம்சம். அவ்விதத்தில் கு.அழகிரிசாமி கம்பரைச் சுவைத்து இருக்கிறார் மேலும் போற்றியிருக்கிறார் என அறியமுடிகிறது. ஒவ்வொரு படைப்பாளருக்கும் பிற படைப்பாளர்கள் வழி காட்டியாவார். இன்றைய சமூகச் சிந்தனை கொண்ட படைப்பாளர்கள் கு.அழகிரிசாமியை வழிகாட்டியாக்கும் விதத்தில் அவரது வாழ்வியல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கு.அழகிரிசாமியின் நாட்குறிப்பார்வம்

நாட்குறிப்பு எழுதுவது நம் வாழ்க்கையை அர்த்த முள்ளதாக்கும். நல்ல சிந்தனையாளர்கள் நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை தங்களுடைய வழக்கமாக மேற்கொண்டிருந்தார்கள். நம் மனநிலையை, நம் திறமையை, நம் குற்றங்களை நமக்கு நாமே தீர்மானித்துக் கொள்வதற்கான சிறந்த கருவி நாட்குறிப்பேடாகும். இத்தகைய நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை கு. ஆழகிரிசாமி கடைபிடித்தார். தம் நண்பருக்கும் அதை அறிவுறுத்தினார். கி.ராவுக்கு எழுதிய கடிதத்தில், "நீ இந்த வருஷம் டைரி எழுது. தினம்தோறும் உன் சிந்தனைகளை ஒளிவு மறைவின்றி எழுதி வை. ஞாபகத்தில் வைக்க வேண்டிய ஒன்றிரண்டு குறிப்புக்களையும் எழுதிக்கொள். அதனால் வருஷக் கடைசியில் நம் ஒரு வருஷ சரித்திரத்தையும், வாழ்க்கையின் வரவு செலவுகளையும் பார்த்து வரக்கூடிய வருஷத்தில் வாழ்க்கை வியாபாரத்தை லாபகரமாக நடத்தலாம் அல்லவா? தவிரவும் நம் சொந்த இன்பதுன்பங்களை உண்மையோடு சொல்லிக் கொள்ள டைரி நண்பனாக உதவுகிறது அல்லவா?[13] என்று கூறியிருப்பதன் மூலம் அறியமுடிகிறது.

## எதிர்கால வாழ்வைப் பற்றிய சிந்தனை

கரிசல் மண்ணின் மைந்தர்களாகிய கு.அழகிரிசாமியும் கி.ராவும் வறுமையில் வாழ்ந்தார்கள் என்பதையும் அவர்களது கடிதங்கள் உணர்த்தியுள்ளன. இத்தகைய வறுமைப்பிடியிலும் புத்தகங்கள் வாசிப்பதையும் இலக்கியங்கள் எழுதுவதையும் தம் கடமையாகக் கொண்டிருந்தார்கள். புத்தகங்களைப் பிரசுரிக்க பிரசுராலயம் வைத்தாக வேண்டும் என்ற கொள்கையும் கொண்டவராக கு.அழகிரிசாமி வாழ்ந்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. "காகிதக் கட்டுப்பாடு நீங்கியதும் குறுகிய அளவில் ஒரு புஸ்தக பிரசுராலயம் ஆரம்பிக்க வேண்டும். 1946 நமக்கு நம்பிக்கையளித்து திசைகாட்டும் துரவ நட்சத்திரமாக வந்திருக்கிறது என்று நினைத்து நாம் உழைக்க வேண்டும்"[14] என்று எழுதியிருப்பதன் மூலம் எதிர்கால வாழ்வியல் பற்றிய சிந்தனை கொண்டவர் என்பதை உணர முடிகிறது.

## உடல் சோர்வுக்கு அஞ்சாதவர்

இலக்கியப் படைப்பில் ஆர்வம் கொண்ட கு.அழகிரிசாமி தம் உடல் நலத்தைப் பற்றிப் பெரிதாகக் கவலைப்படுவதில்லை. காய்ச்சலால் இளைத்துப்போன கு.அழகிரிசாமி "சீவாமல் குத்திட்டு நிற்கும் தலை மயிரையும்

கண்ணாடியில் பார்க்கும் போது அதுவும் ஒரு நல்ல சித்திரமாகத் தான் இருக்கிறது. நமக்கு எதுதான் நல்ல சித்திரமில்லை?[15] என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் நகைச்சுவையுணர்வை வெளிப்படுத்தி உள்ளார் என்பதை உணரமுடிகிறது. உடல்சூடு காரணமாக கு.அழகிரிசாமி பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும் தம் நண்பருக்குக் எழுதும் கடிதத்தில் வெளிப்படுத்த கருதாதவராக இருந்துள்ளார். கி.ரா தம் உடலில் ஏற்பட்ட சிரங்கைப் பற்றி கடிதத்தில் எழுதியதற்குப் பதில் கடிதம் போட்ட கு.அழகிரிசாமி, “உன் சிரங்கைப் பற்றி நீவர்ணித்தது என் சிரங்கைப் பற்றி வர்ணித்தது போலவே இருந்தது. முகத்தைத் தவிர மற்ற அங்கங்களிலெல்லாம் எனக்குச் சிரங்கினால் ஏற்படுகிற வேதனையில் பாதி கூட உனக்கு ஏற்பட்டிருக்குமா எனச் சந்தேகிக்கிறேன். இரவில் தூக்கமில்லை. கண் விழித்திருக்கிற நேரத்தில் கை சரீரத்தில் ஏதாவது ஒரு இடத்தில் வீணை மீட்டிக் கொண்டே இருக்கிறது. வேதனை சரீரத்தோடு நிற்கட்டுமே! கடிதத்திலும் ஏன் ஏற வேண்டும்?[16] என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் அன்றைய எழுத்தாளர்களின் வாழ்வியல் நோய்களுக்கிடையே உலாவக் கூடிய சூழல் இருந்துள்ளமையை அறிய முடிகிறது.

## முடிவுரை

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அவ்வரிய பிறப்பில் நல்ல கொள்கையோடு வாழ்வது மிக அரிது. நல்ல கொள்கை கொண்ட மனிதர்களில் ஒருவராக வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்தவராகப் பிறருக்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர் கு.அழகிரிசாமி என்பதை அவரது கடிதங்கள் மூலம் அறியமுடிந்தது. அன்னாரது வாழ்க்கை நம் மண்ணகத்துக்குப் பெருமையாகும்.

## அடிக்குறிப்புகள்

1. காமராசு இரா, கடித இலக்கியம் - ப -10
2. மேலது - ப -10
3. திருக்குறள் -786
4. காமராசு இரா, கடித இலக்கியம் ப -105
5. மேலது - ப -130
6. மேலது - ப 104
7. மேலது - ப -123
8. மேலது – ப -114, 127
9. மேலது - ப -126
10. மேலது - ப -131